# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.16 (LW 26 )

| பெயர் | அய்யாச்சாமி | தொழில் | |
|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | நல்லய்யா | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 13.06.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்த போது நிலக்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 99/2021 பிரிவு 174 சி.ஆர்.பி.சி வழக்கில் இறந்து போன சென்றாயன் 39 வயது, தகப்பனார் பெயர் மொக்கை ராஜ் கிழக்கு தெரு, குரும்பபட்டி நிலக்கோட்டை தாலுகா, என்பவரது பிரேதத்தை 10.03.2021ஆம் தேதியில் அம்மையநாயக்கனுர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் சண்முக லட்சுமி (பொறுப்பு நிலக்கோட்டை காவல் நிலையம்)அவர்கள் நிலக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பிரேத விசாரணை செய்து பிரேத பரிசோதனை செய்ய எழுதிக்கொடுத்த விண்ணப்ப கடிதத்தை பெற்று, நிலக்கோட்டை அரசு மருத்துவமனை பணியில் இருந்த டாக்டர். சாபுதீன் அவரிடம் கொடுத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து பிரேத பரிசோதனைக்கு பின் அவரது உடலை அவரது உறவினரிடம் சமூக வழக்கப்படி அடக்கம் செய்ய ஒப்படைத்தேன். காவல் நிலையம் வந்து அறிக்கை சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்க விசாரணை</u>

பிரேத விசாரணைக்கு பிறகு பிரேதத்தில் இருந்து உடமைகளையும், ஆடைகளையும் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:21:07 +0530

Additional District Judge,

Dindigul.